செய்தி வெளியீடு : 569 நாள்: 07-07-2010.

நீலகிரி மாவட்டத்தில் பொது விநியோகத் திட்டச் செயல்பாடுகள் குறித்து வீடு வீடாகவும், நியாய விலைக் கடைகளிலும் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்கள் திடீர் ஆய்வு

2 விற்பனையாளர்கள் தற்காலிகப் பணி நீக்கம்

1 மகளிர் நியாயவிலைக் கடை கூட்டுறவுத் துறைக்கு மாற்றம்

பொது விநியோகத் திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்கள் இன்று (07.07.2010) காலை 9.00 மணிக்கு மாண்புமிகு கதர் துறை அமைச்சர் திரு. கா. ராமச்சந்திரன், மாவட்ட ஆட்சியர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர்களுடன் நீலகிரி மாவட்டம், நடுவட்டம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின் டி.ஆர். பஜார் நியாயவிலைக் கடை, கூடலூரிலுள்ள தாமரை மகளிர் நியாயவிலைக் கடை, மேல்கூடலூர் ஓ.வி.எச். சாலையிலுள்ள கஸ்தூரி மகளிர் நியாயவிலைக் கடை மற்றும் நீலகிரி மாவட்ட கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையின் கடை எண். AB005ல் ஆய்வுகள் மேற்கொண்டார்கள்.

டி.ஆர். பஜார் நியாயவிலைக் கடையில் உள்ள இருப்பு பதிவேடு மற்றும் வழங்கல் பதிவேடுகளை ஆய்வு செய்தார்கள். இரத்து செய்யப்பட்ட போலி குடும்ப அட்டைகள் குறித்த விவரங்களை அ பதிவேட்டில் முறையாக பதிவு செய்யப்படாததையும், வரிசையில் நின்றிருந்த பொது மக்களிடம் குடும்ப அட்டைளை பெற்று ஆய்வு செய்த போது பொருட்கள் வழங்காமலேயே வழங்கல் பதிவேடுகளில் பதிவுகள் மேற்கொண்டுள்ளதையும் கண்டறிந்தார்கள். எனவே, போலிப் பட்டியல் போடப்பட்ட காரணத்தினால், நியாயவிலைக் கடை விற்பனையாளர் திரு. சந்திரன் என்பவரை தற்காலிகப் பணி நீக்கம் செய்யவும், மேற்படி நியாயவிலைக் கடையில் பொருட்கள் வழங்கியது குறித்து 100 சதவீதத் தணிக்கை மேற்கொள்ளவும் ஆணையிட்டார்கள்.

கூடலூர் தாமரை மகளிர் நியாயவிலைக் கடை ஆய்வின்போது பொது மக்களுக்கு அனைத்து பொருட்களும் எடை குறைவில்லாமல், சரியான அளவில் வழங்கப்படுவதை கேட்டறிந்தார்கள்.

மேல்கூடலூர் கஸ்தூரி மகளிர் நியாயவிலைக் கடையின் விற்பனையாளர் பொது மக்களிடம் கடுமையாக நடந்து கொள்கிறார், மற்றும் அத்தியாவசியப் பொருட்களை முறையாக வழங்குவதில்லை என்று குழுமியிருந்த பொது மக்களில் பலர் புகாராக தெரிவித்ததன் பேரில், மேற்படி கஸ்தூரி மகளிர் நியாயவிலைக் கடையை கூட்டுறவுத் துறைக்கு மாற்றம் செய்ய ஆணையிட்டார்கள்.

நீலகிரி மாவட்ட கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையின் கடை எண். AB005ல் வரிசையில் நின்றிருந்த பொது மக்களிடம் குடும்ப அட்டைளை பெற்று ஆய்வு செய்த போது பொருட்கள் வழங்காமலேயே வழங்கல் பதிவேடுகளில் பதிவுகள் மேற்கொண்டுள்ளதையும் கண்டறிந்தார்கள். எனவே, போலிப் பட்டியல் போடப்பட்ட காரணத்தினால், நியாயவிலைக் கடை விற்பனையாளர் திரு. மனோகரன் என்பவரை தற்காலிகப் பணி நீக்கம் செய்யவும் மேற்படி நியாயவிலைக் கடையில் பொருட்கள் வழங்கியது குறித்து 100 சதவீதத் தணிக்கை மேற்கொள்ளவும் ஆணையிட்டார்கள்.

அனைத்து நியாயவிலைக் கடைகளிலும், இரத்து செய்யப்பட்ட குடும்ப அட்டைகளின் விவரத்தை அ பதிவேட்டில் முறையாக பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பது குறித்து ஆய்வு மேற்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு ஆணையிட்டார்கள்.

அடுத்து கூடலூர் கிடங்கில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. கிடங்கினில் பொருட்களை இருப்பு வைப்பதற்கு போதுமான இடவசதி இல்லையென்பதை அறிந்த அமைச்சர் அவர்கள் கிடங்கிற்கு அருகில் உள்ள இடத்தில் 1,500 மெ.டன் கொள்ளளவுடைய கிடங்கு ஒன்றினை கட்ட நடவடிக்கை மேற்கொள்ளும்படி தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு உத்தவிட்டார்கள்.

நியாயவிலைக் கடைகள் சிறப்பாக செயல்பட ஓராண்டு பணி முடித்த நியாயவிலைக் கடை விற்பனையாளர்களை வேறு கடைகளுக்கு பணி மாற்றம் செய்யவும் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்கள்.

மேலும், பொது விநியோகத் திட்டப் பொருட்கள் வழங்குவது மற்றும் விற்பனையாளர்களின் சேவையில் எதேனும் குறைபாடுகள் இருப்பின் உடனடியாக மாநில நுகர்வோர் தொலை தொடர்பு உதவி மைய எண்.28592828லும், நீலகிரி மாவட்ட வழங்கல் அலுவலருக்கு 9445000258 என்ற செல்பேசியிலும், நீலகிரி மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு 2442344 என்ற தொலைபேசியிலும் புகார்களைத் தெரிவிக்கும்படி அறிவுறுத்தினார்கள்.

தல ஆய்வு முடிவு பெற்ற பின்னர், நண்பகல் 3.30 மணிக்கு நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கத்தில் உணவுப் பொருள் வழங்கல் துறை, கூட்டுறவுத் துறை மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஆகியவற்றில் நீலகிரி மாவட்டத்தில் பொது விநியோகத் திட்டத்தினை செயல்படுத்தும் அலுவலர்களின் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்கள். ஆய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு கதர் துறை அமைச்சர் திரு. கா. ராமச்சந்திரன் அவர்களும் கலந்து கொண்டார்கள்.

ஆய்வு கூட்டத்தை தொடங்கி வைத்து மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்கள் உரையாற்றுகையில் நியாயவிலைக் கடை பணியாளர்கள் பணியின் போது கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகள் குறித்து அளிக்கப்பட்டுள்ள கையேட்டின்படி 3 மாதத்திற்கு ஒரு முறை மண்டல இணைப்பதிவாளர் பயிற்சி அளித்து விற்பனையாளர்களுக்கு அவ்வப்போது ஏற்படும் சந்தேகங்களை தீர்க்க வேண்டும்; கிடங்குகளிலிருந்து நியாயவிலைக் கடைகளுக்கு தரமான சரியான எடை மற்றும் அளவில் பொருட்களை அனுப்ப வேண்டும்; தரமில்லாத பொருட்கள் கிடங்குகளிலிருந்து பெறப்பட்டால் அவைகளை மூன்று தினங்களுக்குள் நியாயவிலைக் கடை பணியாளர்கள் கிடங்குகளுக்கு திருப்பி அனுப்பி தரமான பொருட்களை பெற்று வழங்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்கள்.

வட்ட வழங்கல் அலுவலர்களின் கடமைகள், பொறுப்புகள், அலுவலத்தில் பெறப்படும் மனுக்கள் தீர்வு, குடும்ப அட்டைகள் தகவல் தொகுப்பை மேம்படுத்தி “அ” பதிவேட்டுடன் சரிபார்த்தல், அத்தியாவசியப் பொருட்களை ஆன்லைன் முறையில் ஒதுக்கீடு செய்தல் போன்ற இனங்களின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்தார்கள்.

ஒவ்வொரு மாதமும் நடைபெறும் வட்ட அளவிலான மக்கள் குறை தீர் கூட்டங்களில் பெறப்பட்ட மனுக்கள் அனைத்தும் தீர்வு செய்யவும், மாவட்ட வருவாய் அலுவலர், எரிவாயு முகவர்கள் எண்ணெய் நிறுவனங்களின் ஒருங்கிணைப்பாளர்களுடன் நடைபெறும் மாதாந்திரக் கூட்டங்களில் எரிவாயு நுகர்வோர்களிடமிருந்து பெறப்படும் புகார்களை தீர்வு செய்யவும் அறிவுரை வழங்கினார்கள்.

ஒதுக்கீட்டு ஆணையினை மாதந்தோறும் 3 தேதிக்குள் பிறப்பிக்க வேண்டும். அத்தியாவசியப் பொருட்களை 25–ம் தேதி முதல் மாத இறுதி நாளுக்குள் முன் நகர்வு செய்தும், மீதமுள்ள பொருட்களை 1-ம் தேதி முதல் 20–ம் தேதிக்குள் நகர்வு செய்தும், அனைத்து பொருட்களும் பொது மக்களை போய் சேரும் நிலைமையை உருவாக்க வேண்டும் என்றும், நியாயவிலைக் கடை பணியாளர்களால் தினசரி S.M.S. மூலம் அனுப்பும் இருப்பு விவரங்களை ஆய்வு செய்து கடைகளுக்கு தேவையான பொருட்களை வட்ட வழங்கல் அலுவலர்கள் நகர்வு செய்ய வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்கள்.

வட்ட வழங்கல் அலுவலகத்தில் மனுக்களை பெறும் அலுவலர் தினமும் காலை 9.00 மணிக்கே அலுவலகத்திற்கு வந்து, பொது மக்களை காத்திருக்கச் செய்யாமல் தாமதமின்றி மனுக்களை பெற்று முறையாக தொடர் எண், தீர்வு தேதி குறிப்பிட்டு ஒப்புதல் சீட்டு வழங்க வேண்டும். 60 நாட்களுக்குள் குடும்ப அட்டை வழங்க வேண்டும்; தள்ளுபடி செய்யப்பட்ட மனுக்களுக்கு 30 நாட்களுக்குள் பதில் அனுப்ப வேண்டும்; குடும்ப அட்டைகளில் மாற்றம் செய்யக் கோரும் விவரங்களை விசாரணை செய்து அன்றே பதிவு மாற்றம் செய்து கொடுக்கப்பட வேண்டும்; மக்கள் சாசன விவரங்களை வட்ட வழங்கல் அலுவலக தகவல் பலகையில் பிரசுரிக்கப்பட வேண்டும்.

நியாயவிலைக் கடைகளுக்கு ஒரே வண்ணத்தில் பெயிண்ட் அடித்து கடையை சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும்; முறையற்ற வகையில் எவரையும் நியாயவிலைக் கடைகளில் பணி செய்ய அனுமதிக்கக்கூடாது ; அத்தியாவசியப் பொருட்களை பொது மக்கள் பார்க்கும் வண்ணம் முறையாக காட்சிப்படுத்த வேண்டும்; சம்பந்தப்பட்ட கடைக்குரிய “அ” பதிவேடுகளில் மாதம் ஒரு முறை முழுமையாக திருத்தங்கள் மேற்கொண்டு வட்ட வழங்கல் அலுவலர்கள் கையொப்பமிட வேண்டும். தவறுபவர்கள் மீது கடும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார்கள். மகளிர் நியாயவிலைக் கடைகளை மாவட்ட வழங்கல் அலுவலர்கள் ஆய்வு செய்ய வேண்டும். அனைத்து வட்ட வழங்கல் அலுவலர்களும் இரத்து செய்யப்பட்ட போலி குடும்ப அட்டைகளின் பட்டியலை கடை வாரியாக, புத்தகமாக 30.07.2010க்குள் தயாரித்து அனைத்து கடைகளின் ‘அ’ பதிவேடு மற்றும் வழங்கல் பதிவேடுகளை சரி பார்த்து தவறான, போலி குடும்ப அட்டைகளின் மீது பொருள் வழங்கும் நியாயவிலைக் கடை பணியாளர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அறிவுறுத்தினார்கள்.

அதன் பிறகு மாவட்ட வழங்கல் அலுவலர், மண்டல இணைப்பதிவாளர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மண்டல மேலாளர் ஆகியோர்களின் செயல்பாட்டினை தனித்தனியாக ஆய்வு செய்து எவ்வித குறைபாடுகளுமின்றி செயல்பட அறிவுரை வழங்கினார்கள். மேலும், இம்மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இலவச எரிவாயு இணைப்புகளை 30.09.2010க்குள் பயனாளிகளைத் தேர்வு செய்து வழங்க ஆணையிட்டார்கள்.

இக்கூட்டத்தில், திரு. ஸ்வரன் சிங், இ.ஆ.ப., முதன்மை செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, திரு. சி.என். மகேஸ்வரன், இ.ஆ.ப., இணை ஆணையாளர், உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, திரு. வீர சண்முக மணி, இ.ஆ.ப., நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், திரு. அர்ச்சனா பட் நாயக், இ.ஆ.ப., நீலகிரி மாவட்ட ஆட்சியர் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

•

7/7/10

உணவுத் துறை அமைச்சரின்
நேர்முக உதவியாளர்
தலைமைச் செயலகம், சென்னை